23 School Teacher, LAD, Jr Asst KH Head.

4.5.15

ஏப்ரல் 2015ஆம் மாதத்திற்கு
சம்பளம் வழங்கும் அதிகாரம்
(Pay Authorization
for the month of April 2015)

பள்ளிக் கல்வித்துறை,
தலைமைச் செயலகம்,
சென்னை–600 009.

கடித எண்.12376/அகஇ/2015–1, நாள் 30.4.2015.

அனுப்புநர்
திருமதி த.சபிதா, இ.ஆ.ப.,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்கள்.
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை–35.
மாநில தலைமைக் கணக்காயர், சென்னை–18/35.
கருவூல கணக்கு ஆணையர், சென்னை–15.

ஐயா,

பொருள்: பள்ளிக் கல்வி – 2011–2012ஆம் கல்வியாண்டில் அனைவருக்கும் இடைநிலைக் கல்வித் திட்டத்தின்கீழ் தற்காலிகமாக தோற்றுவிக்கப்பட்ட 3550 பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள், 710 ஆய்வக உதவியாளர் பணியிடங்கள் மற்றும் 710 இளநிலை உதவியாளர் பணியிடங்களின் பணியிட நீட்டிப்பு காலம் 31.12.2014 உடன் முடிவடைந்துள்ளது – ஏப்ரல் 2015 மாதத்திற்கு ஊதியம் வழங்கும் அதிகார ஆணை (Pay Authorization) வழங்க வேண்டுதல் – சார்ந்து.

பார்வை:
1. அரசாணை (நிலை) எண்.198, பள்ளிக் கல்வித் (சி2) துறை, நாள் 07.12.2011.
2. அரசாணை (1டி) எண்.34, பள்ளிக் கல்வி, நாள் 13.2.2014.
3. பள்ளிக் கல்வி இயக்குநர், சென்னை–6 அவர்களின் கடித ந.க.எண் 095293/எல்/இ3/2014, நாள் 16.04.15.

-------

பார்வை 1ல் காணும் அரசாணையில் அனைவருக்கும் இடைநிலைக் கல்வித் திட்டத்தின் கீழ் 2011–2012ஆம் கல்வியாண்டில் அனைவருக்கும் இடைநிலைக் கல்வித் திட்டத்தின் கீழ் 710 ஊராட்சி ஒன்றிய / மாநகராட்சி / நகராட்சி / நலத்துறை நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாக தரம் உயர்த்தியும், தரம் உயர்த்தப்பட்ட பள்ளிகளுக்கு தலா 5 பட்டதாரி ஆசிரியர்கள் வீதம் மொத்தம் 3550 ஆசிரியர் பணியிடங்கள் ரூ.9300–34800 + தரஊதியம் ரூ.4600 என்ற ஊதிய விகிதத்திலும், 710 ஆய்வக உதவியாளர் பணியிடங்கள் ரூ.5200–20200 + தரஊதியம் ரூ.1900 என்ற ஊதிய விகிதத்திலும், 710 இளநிலை உதவியாளர் பணியிடங்கள் ரூ.5200–20200 + தரஊதியம் ரூ.2400 என்ற ஊதிய விகிதத்திலும், 710 நடுநிலைப் பள்ளி தலைமையாசிரியர் பணியிடங்களை ரூ.9300–34800 + தரஊதியம் ரூ.4600 + சிறப்புப்படி ரூ.750/– என்ற ஊதிய விகிதத்தில் உயர்நிலைப் பள்ளி தலைமையாசிரியர் பணியிடங்களாக நிலை உயர்த்தியும் ஆணை வெளியிடப்பட்டுள்ளது. மேற்காண் பணியிடங்களுக்கான பணியிட நீட்டிப்பு 31.12.2014 உடன் நிறைவடைந்ததால் 01.01.2015 முதல் ஊதியம் பெறத்தக்க வகையில் 5 ஆண்டுகளுக்கு தொடர்ந்து பணியிட நீட்டிப்பு வழங்குவது தொடர்பாக பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

2. பள்ளிக் கல்வி இயக்குநர் தனது கடிதத்தில் 01.01.2015 முதல் 31.03.2015 வரை ஊதியம் வழங்கும் அதிகார ஆணை (Pay Authorisation) வழங்கிட அனுமதி அளிக்கப்பட்டுள்ளதாலும், மேலும் தொடர் நீட்டிப்பு வழங்குவதில் காலதாமதம் ஏற்படும் பட்சத்தில் ஏப்ரல் 2015 மாதத்திற்கு ஊதியம் வழங்கும் அதிகார ஆணை (Pay Authorisation) வழங்கும்படி அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

3. மேற்காண் பணியிடங்களுக்கு தொடர் நீட்டிப்பு வழங்குவது குறித்த பள்ளிக் கல்வி இயக்குநரின் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளதால், 3550 பட்டதாரி ஆசிரியர், 710 ஆய்வக உதவியாளர் மற்றும் 710 இளநிலை உதவியாளர் பணியிடங்களுக்கு ஏப்ரல் 2015 மாதத்திற்கு சம்பளம் மற்றும் இதர படிகளுக்கான பட்டிகள், உரிய அலுவலர்களால் தாக்கல் செய்யப்படும் போது அவை ஏனைய இனங்களில் சரியாக இருக்கும் நிலையில் ஏற்றுக் கொண்டு சம்பளம் அனுமதிக்குமாறு தங்களை கேட்டுக் கொள்ளப் பணிக்கப்பட்டுள்ளேன்.

4. இக்கடிதம் நிதித்துறையின் அ.சா.எண்.24773/Edn-II/15, நாள் 30.4.2015–ல் பெற்ற ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

தங்கள் உண்மையுள்ள,

30/4/15

அரசு முதன்மைச் செயலாளருக்காக.

நகல்

பள்ளிக் கல்வி இயக்குநர், சென்னை–6.

நிதி (கல்வி–II) துறை, சென்னை–9.

அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள்.